## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண். | : | 110/2015 மற்றும் 54/2017(கூட்டு விசாரணை) | வா.சா. | : | 2 |
| பெயர் | : | முருகவேல் | த/பெ. | : | பெருமாள் |
| தாலுகா | : | நத்தம் | கிராமம் | : | பாப்பாபட்டி |
| தேதி | : | 17.02.2025 | வயது | : | 49/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11.13 A.M. – 11.51 A.M.
01.00 P.M. – 01.19 P.M.

**வாதி தரப்பு முதல் விசாரணை:**

நான் அ.வ.எண்.110/2015 வழக்கின் வாதி தரப்பு 2வது சாட்சியாவேன். நான் தற்போது ஊராளிபட்டி கிராமத்தில், கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

1) ஊராளிபட்டி கிராமம் உட்கடை ஏரக்காபட்டி கிராம நத்தம் சர்வே எண்.19/1 கிராம கணக்கில் எவ்வாறு உள்ளது என்றால் சாலை மற்றும் தெரு அரசு புறம்போக்காக விஸ்தீரணம் 12 ஏர்ஸ் உள்ளது. சர்வே எண்.19 எவ்வாறு உள்ளது என்றால் ஏரக்காபட்டி கிராம நத்தமாக உள்ளது. சர்வே எண்.19 பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நத்தமாகவும், சாலை மற்றும் தெரு அரசு புறம்போக்காகவும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.19/2 முதல் 8 வரையிலான உட்பிரிவுகள் எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் 1993ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது.

2) நத்தம் பட்டா நீண்டநாள் அனுபவத்தின்பேரில் அங்கு வசித்து வந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்தது என்றால் சரிதான். அதன்படி தான் சர்வே எண்.19/2 முதல்

8 வரையிலான நபர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.19/1 ற்கு நான்குமால், கிழக்கு – ஊராளிபட்டி கிராமம், தெற்கு – ஏரக்காபட்டி கிராம நத்தம், மேற்கு – ஏரக்காபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பரந்தவீரன் வகையறா வீடு, வள்ளியம்மாள் வகையறா வீடு, அழகு, நல்லியப்பன் வீடுகள் உள்ளது, நல்லியப்பன் வகையறா தென்னந்தோப்பு உள்ளது, வடக்கு – நத்தத்திலிருந்து, கொட்டாம்பட்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலை உள்ளது.

3) சர்வே எண்.19/1 ன் மேல்புறம், தென்வடல் நீளம் 55.6 மீட்டர் உள்ளது. இதற்கும் மேல்புறம் சர்வே எண்.18/10A, 10B நிலம் உள்ளது. சர்வே எண்.18/10A, 10B 2018 ம் வருடம் உட்பிரிவானது. சர்வே எண்.18/10A நல்லியப்பன் வகையறா பெயரிலும், சர்வே எண்.18/10B நல்லியப்பன் பெயரிலும் உள்ளது. சர்வே எண்.18/10A ல் வடகிழக்கு மூலையில் ஒரு பழமையான வீடு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.18/10A ன் நான்குமால், வடக்கு – கொட்டாம்பட்டியிலிருந்து நத்தம் செல்லும் தேசிய நெடுஞ்சாலை உள்ளது, கிழக்கு – ஏரக்காபட்டி கிராம நத்தம் உள்ளது, தெற்கு – இலாகி மௌலானா புஞ்சை நிலம் உள்ளது, மேற்கு – நல்லியப்பன் வகையறா, பீட்டர் வகையறா புஞ்சை நிலம் உள்ளது.

4) சர்வே எண்.18/10 ன் கிழக்கு பகுதியில், தென்வடல் நீளம் எவ்வளவு என்றால் 119.6 மீட்டர் உள்ளது. இதில் வடபுறம் 55.6 மீட்டர் சர்வே எண்.19/1 ன் மேற்கு எல்லையாக உள்ளது என்றால் சரிதான். மீதி தென்புறமுள்ள 64 மீட்டர் தனியார் குடியிருப்பு பகுதிகளாக உள்ளது. சர்வே எண்.18/10A மற்றும் 10B அடங்கலில் என்னவாக உள்ளது என்றால் புஞ்சை நிலமாக உள்ளது. அதில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால், தென்னை உள்ளது. சர்வே எண்.18/10A மற்றும் சர்வே எண்.18/10B குடியிருப்பாக வகைப்பாடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.18/10A நல்லியப்பன் வகையறா யார் என்றால் 1) நல்லியப்பன்,

2) செல்லக்கண்ணு, 3) நல்லம்மாள், 4) நல்லியப்பன், 5) சின்னையா, 6) ராமன், 7) நல்லியப்பன், 8) பெருமாள், 9) ராமன் என 9 பேர் பெயரில் பட்டா எண்.1287 ஆக உள்ளது. கிராம கணக்கில் தாக்கலாகியுள்ளது.

5) சர்வே எண்.18/10B ன் பட்டா எண்.1835 ஆகும். அது நல்லியப்பன் பெயரில் மட்டும் உள்ளது. 26.10.2018 ம் தேதி மேற்படி பட்டா தாக்கலாகியுள்ளது. சர்வே எண்.19/1 ஒழுங்கற்ற வடிவில் தெருக்களாக உள்ளது என்றால் சரிதான். தற்போது சர்வே எண்.19/1 ல் நேராக உள்ள பகுதிகளுக்கு மட்டும் சிமிண்ட் சாலை மற்றும் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரிவினையாகாத சர்வே எண்.18/10 ற்கு வடபுறமுள்ள நத்தத்திலிருந்து, கொட்டாம்பட்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலையும், கிழபுறமுள்ள சர்வே எண்.19/1 ல் உள்ள 55.6 மீட்டர் நீளமுள்ள பகுதியும் பிரதான வழிகளாக உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் பின்வரும் ஆவணங்களையும் கொண்டுவந்துள்ளேன். அதனை சாட்சிய சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) சர்வே எண்.18 ன் புலப்படம் – சான்றிட்ட நகல்– சா.சா.ஆ.1 ஆகவும்,

2) சர்வே எண்.18 ன் 'அ' பதிவேடு – சான்றிட்ட நகல்– சா.சா.ஆ.2 ஆகவும்,

3) சர்வே எண்.18 ன் கிராம சிட்டா – சான்றிட்ட நகல்– சா.சா.ஆ.3 ஆகவும்,

4) சர்வே எண்.18 ன் அடங்கல் – சான்றிட்ட நகல்– சா.சா.ஆ.4 ஆகவும்,

5) சர்வே எண்.19 ன் புலப்பட – சான்றிட்ட நகல்– சா.சா.ஆ.5 ஆகவும்,

6) சர்வே எண்.19 ன் அடங்கல் – சான்றிட்ட நகல்– சா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

6) நான் வட்டாட்சியரின் அனுமதி பெற்று தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.வ.எண்.54/2017 வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

அ.வ.எண்.54/2017 வழக்கில் 2ம் பிரதிவாதியாக நத்தம் வட்டாட்சியரும், 1ம் பிரதிவாதியாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சிதலைவரும் உள்ளார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. ஊராளிபட்டி கிராமத்தில் எவ்வளவு நாளாக பணி செய்கிறேன் என்றால், 6 மாதமாக பணி செய்கிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த வழக்கு என்ன என்றால் பாதை பிரச்சினை சம்பந்தமான வழக்கு.

7) சா.சா.ஆ.2 ஆவணம் சர்வே எண்.19/1 சாலை தெரு என்று உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.18ல் பொதுப்பாதை என்றோ, சாலை தெரு என்றோ பிரிவு இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.18/10B ல் வீடு உள்ளது என்றால் சரிதான். அது நல்லியப்பன் பெயரில் உள்ளது. சர்வே எண்.19/1 நத்தத்திலிருந்து கொட்டாம்பட்டி செல்லும் சாலையிலிருந்து தென்புறமாக சென்று, பின்னர் மேற்கு புறமாக அந்த பாதை 2.4 மீட்டர் தூரத்திற்கு சென்று சர்வே எண்.18/10A ல் சேர்கிறது. சர்வே எண்.18/11 ற்கு சர்வே எண்.18/10 ல் உள்ள நபர்கள் அனுமதித்தால் தான் செல்லமுடியும்.

8) நான் புல வரைபடத்தில் கண்ட இடத்தை பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். இன்று காலையில் பார்த்தேன். சர்வே எண்.19/1 மேற்கே திரும்பும் இடத்தில் பாதையில் ஒரு குடிசை உள்ளது என்றால் சரிதான். அந்த குடிசைக்கு அடுத்து மேல்புறம் சர்வே எண்.18/10A உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.19/3 முதல் 8 வரையிலான புல எண்களில் உள்ளவர்கள் சர்வே எண்.19/1ல் உள்ள பாதையை தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். பாதையில் உள்ள ஆக்கிரமிப்பு சம்பந்தமாக அதனை அகற்றுவதற்கு நான் நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால், இந்த வழக்கு நிலுவையிலுள்ளதால் நடவடிக்கை எடுக்கவில்லை.

9) மாவட்ட ஆட்சியர், அ.வ.எண்.54/2017 ன் வாதி ராமன் கொடுத்த புகாரில், ஓ.மு.எண்.31194/2015/டி2 என்ற நடவடிக்கையில் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி வட்டாட்சியருக்கு கோரப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சா.சா.ஆ.1 ல் உள்ள சர்வே எண்.18 ல் எவ்வித பாதை அமைப்பும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.18/10A, 10B, 11 ஆகியவற்றில் பாதையில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 17.02.2025 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.02.17 11:54:49 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.